2017 ஜனவரி 24] [பேரவைத் தலைவர்]

*சாம்ராட்" என்ற பட்டத்தை, முன்னாள் முதலமைச்சர் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் வழங்கியது இங்கு நினைவுகூரத்தக்கது.*

*அன்னாரது மறைவால் அவரை இழந்து வாடும் அவரது குடும்பத்தினருக்கும், திரை உலக நண்பர்களுக்கும், ரசிகப் பெருமக்களுக்கும் இப்பேரவை ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக்கொள்கிறது.*

## (உ) திரு. பிடல் காஸ்ட்ரோ, கியூபா நாட்டின் முன்னாள் அதிபர் அவர்கள் மறைவு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *கியூபா நாட்டின் விடுதலைப் போராட்டத்தை தலைமை தாங்கி நடத்தியவரும், விடுதலை பெற்ற நாட்டினை முன்னேற்றப் பாதையில் நடத்திச் சென்று உலக நாடுகளிலே புரட்சியாளர்களுக்கு உந்து சக்தியாய் திகழ்ந்தவரும், 50 ஆண்டுகள் தொடர்ந்து அதிபராக நல்லாட்சி புரிந்தவருமான திரு. பிடல் காஸ்ட்ரோ அவர்கள் தனது 90-வது அகவையில் 25-11-2016 அன்று மறைந்த செய்தி அறிந்து இப்பேரவை அதிர்ச்சியும், ஆற்றொணாத் துயரமும் கொள்கிறது.*

*இவர் துணிச்சலுக்கும், அசாத்திய முடிவுகளுக்கும் பெயர் பெற்றவர். இந்தியாவுடன் மிக நெருக்கமான உறவு கொண்டு ஆட்சி புரிந்தார்.*

*அன்னாரது மறைவால் அவரைப் பிரிந்து வருந்தும் அவர்தம் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் இப்பேரவை தெரிவித்துக்கொள்கிறது.*

*மறைந்த இப்பெருந்தகைகளுக்கு மரியாதை செலுத்தும் வகையில் மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று இரண்டு மணித்துளிகள் அமைதி காக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.*

*(உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று இரண்டு மணித்துளிகள் அமைதி காத்தனர்.)*

சட்டமன்றப் பேரவை — LEGISLATIVE ASSEMBLY — வாய்மையே வெல்லும் — TRUTH ALONE TRIUMPHS